# நெகிரி மாநில அரசு மக்கள் நலனில் அதிக கவனம் செலுத்துகிறது

(கா.மாரியப்பன்)



சிரம்பான், ஆக. 31 –

நெகரி செம்பிலான் மாநில பக்காத்தான் ஹாரப்பான் அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறிதிகளை நிறைவேற்றி வருவதோடு மக்கள் நலனில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. மாநில மந்திரி புசார் டத்தோ ரீ அமினுடின் ஹாருன் தலைமையில் மாநிலம் துரித வளர்ச்சியடைந்துள்ளதோடு. மக்களின் நலச்சேவையில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த கோவிட் – 19 கால கட்டத்தில் மாநில அரசு 2021 ஆண்டு 50 ஆயிரம் குடும்பங்களுக்கு 50 இலட்சம் ரிங்கிட் பெருமான–முள்ள உதவிப் பொருள்கள் மற்றும் பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. மேலும் மாநிலத்தில் உள்ள 36 சட்டமன்றத் தொகுதிகளுக்கு தலா 1 இலட்சம் முதல் 2 இலட்சம் ரிங்கிட் வரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆவது தேர்தல் வாக்குறுதிபடி தற்காலிக வீட்டுமனை நிரந்திர அந்தஸ்த்துக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இதுவரை சங்கங்களின் பதிவிலாகாவில் பதிவுப் பெற்ற வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சமூக இயக்களின் சமய, கலாச்சார மேம்பாட்டிற்கு 18 இலட்சம் ரிங்கிட் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் இஸ்லாம் அல்லாதவர்கள், மனிதவளம் மற்றும் தோட்டப்புறத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஜெ.அருள்குமார் தெரிவித்தார்.



உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு சான்றிதழ் தர கல்விக்கு 500 ரிங்கிட், டிப்ளோமா கல்விக்கு 750 ரிங்கிட் மற்றும் இளங்கலை தர கல்விக்கு 1000 ரிங்கிட் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக வருடத்திற்கு 40 இலட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது.

மரண காப்பீட்டு திட்டத்தின் மூலமாக இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பதிற்கு 2000 ரிங்கிட் மற்றும் விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு 6000 ரிங்கிட் வழங்கப்படும். இ–காசே திட்டத்தில் பதிவுப் பெற்ற 34,562 பேர் இதற்கு தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 15 இலட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டிள்ளது.

அரசாங்க கடைகள், சந்தை மற்றும் வீடுகளுக்கு 38 லட்சம் ரிங்கிட் பெருமானமுள்ள 4 மாத கால வாடகை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் 6115 அரசாங்க கடை மற்றும் சந்தை நடத்துபவர்களும் மற்றும் 3121 அரசாங்க வாடகை வீட்டில் வாசிப்பவர்களும் பயனடைவார்கள்.

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் கோவிட் 19 தடுப்பூசி திட்டத்தில் 18 வயதிற்குட்பட்டவர்களில் 90 சதவீதத்தினர் தங்களுடைய முதல் தடுப்பூசியைச் செலுத்தியுள்ளனர். மாநில மற்றும் மத்திய அரசாங்கமும் இணைந்து இந்த 100 பி.பி.வி (தடுப்பூசி செலுத்தும் மையம்) அமைத்து சிறப்பாக செயல்படுகின்றன.

துன்ஸ் மற்றும் துன்ஸ் பிலாஸ் திட்டத்திற்கு மாநில அரசு 60 இலட்சம் ரிங்கிட் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தில் 2023 சிறு தொழில் வியாபாரிகளுக்கு தலா 3000 ரிங்கிட வழங்கப்பட்டுள்ளது. மேலும் தகுதி பெற்றுள்ள 200 சிறு தொழில் வியாபாரிகளுக்கு 15,000 ரிங்கிட் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது.

புதிய மேம்பாட்டு திட்டத்தில் இஸ்லாம் அல்லாத வழிபாட்டு தலங்களுக்கு 1 ஏக்கர் நிலம் (10 ஆயிரம் குடியிருப்பாளர்கள் இருப்பின்) ஒதுக்கப்படவேண்டும். இஸ்லாம் அல்லாதவர்களுக்காக கண்டிப்பாக 30ஏ இடுகாட்டு நிலம் ஒதுக்கப்பட வேண்டும்.

இதனால் இஸ்லாம் அல்லாதவர்களுக்கான வழிபாட்டு தலங்கள் மற்றும் இடுகாடு நிலப்பிரச்சனைகள் ஏற்படாது எனவும் தெரிவித்தார் நீலாய் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஜெ. அருள்குமார்.






